**செய்தி வெளியீடு எண்.166** **நாள். 19 .02.2010**

**மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்**
**திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில்**
**கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம்**

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கோ.சி மணி அவர்கள் தலைமையில் இன்று (19–2–2010) தலைமைச் செயலகத்தில், நடப்பாண்டில் கூட்டுறவுத்துறையின் செயலாக்கம் குறித்தான உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

நடப்பாண்டில் ரூ.2000 கோடி அளவிற்கு பயிர்க்கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் 15.2.2010 வரை ரூ.1,905.82 கோடி அளவிற்கு 7,83,988 பயனாளிகளுக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை கடன்பெறாத 2,38,927 புதிய விவசாயிகளுக்கு ரூ.571.51 கோடி அளவிற்குப் பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது. அதுபோல் 2009–2010 ஆம் ஆண்டில் 10,000 புதிய விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்க திட்டமிடப்பட்டதில் 11759 விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு ரூ.145.26 கோடி அளவிற்குப் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கூட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வங்கிகளில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. யத்தீந்திர நாத் ஸ்வேன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.ந.அசோகன், திரு.எல்.சித்திரசேனன், திரு. அ.சங்கரலிங்கம், திரு.க.மா.தமிழரசன், திரு. ப.பாண்டியன் மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**